# சிதம்பரம் நகராட்சி



**2021 ம் ஆண்டு ஆனி திங்கள் 14—ம் நாள் 28.06.2021 திங்கள் கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம் நடைபெறும்**

**மன்றக்கூட்டப் பொருள்**

**1)** இந்நகராட்சியில் இயங்கி வரும் புதிய பாதாள சாக்கடை திட்ட கழிவு நீரேற்றும் பணியில் கனகசபை நகரில் உள்ள கழிவு நீரேற்று நிலைய இயக்கத்தின் சோதனை ஓட்டம் பூர்த்தியாகி, ஐந்தாண்டு கால பராமரிப்பு பணிக்கால நிலையில் இயங்கி வருகின்றன. இத்திட்டத்தின் செயல்பாடு முழுகொள்ளளவு திறனுடன் செயல்பட அப்பகுதிகளில் சேகரிக்கப்படும் அனைத்து கழிவு நீரையும் ஒன்றினைத்து கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல ஏதுவாக பழைய புதைவடிகால் திட்டத்தில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் கசிவடையும் கழிவு நீரையும் குழாய் மூலம் புதிய பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் சேகரிப்பு Screenwell ல் வெளியேற்ற குழாய் அமைக்கும் பணிக்கும், இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ.43,000/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை 2021—2022ம் நிதியாண்டு பொது வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசிய அவசரம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கே ஒப்படைப்பு பணியாக நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் M/Sபாலன் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 4604 / 2006 / இ1**

**2)** சிதம்பரம் நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக **15.06.1998** முதல் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சி பகுதி **4.82** சதுர கிலோ மீட்டர் பரப்பை கொண்டு **33** வார்டுகளுடன், **62153** மக்கள் தொகை கொண்ட நகராட்சியாகவும் செயல்பட்டு வருகிறது . இந்நகரில் நாள் ஒன்றுக்கு **18** மெட்ரிக் டன் திடக்கழிவு உருவாகின்றது. தேர்வு நிலை நகராட்சியில் பொது சுகாதார பணிகளை கண்காணிக்க ஒரு

துப்புரவு ஆய்வரும், 2 துப்புரவு பணி மேற்பார்வையாளர்களும் பணிபுரிகின்றார்கள். மேலும், அரசால் அனுமதிக்கப்பட்ட – 197 தூய்மைப்பணியாளர் பணியிடத்தில், 43 தூய்மைப்பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றார்கள், பணியாளர் இறப்பு மற்றும் ஓய்வு போன்றவைகளால் 153 தூய்மைப்பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது.

சிதம்பரம் நகராட்சிப்பகுதியில் உள்ள 33 வார்டுகளில், பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்வதற்கு, அரசாணை (நிலை) எண்–101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 30.04.1997 – ன் படி – 244 தூய்மைப்பணியாளர்கள் தேவைப்படும் நிலையில், 43 நிரந்தர தூய்மைப்பணியாளர்களும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவின் ஆணைக்கிணங்க, (ந.க.எண் K.Dis 12398/P3/2018 நாள். 13.05.2018) ஒப்பந்ததாரர் மூலம் 142 பணியாளர்களும் , கூடுதலாக – 185 பணியாளர்களைக்கொண்டு சுகாதாரப் பணி செம்மையாக செயல்பட்டு வருகிறது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் வழங்கப்பட்ட அனுமதிக்காலம் வருகின்ற அக்டோபர் 2021 உடன் முடிவடைகின்றது.

மேற்கண்ட அரசாணையின்படி – 244 தூய்மை பணியாளர்கள் தேவைப்படும் நிலையில், தற்போது 43 நிரந்தரப்பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றார்கள். மீதம் உள்ள 201 தூய்மைப்பணியாளர்களை அரசின் மூலம் நிரந்தரமாக நியமிக்கப்பட்டு ஊதியம் வழங்கினால், ஓராண்டிற்கு செலவினம் ரூ. 5,03,56,932 /– ஆகும். அதே அளவு பணியாளர்களை வெளி முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமித்து ஊதியம் வழங்கினால் ஆகும் உத்தேச செலவினம் ( மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி விகிதம் ) ஒரு ஆண்டிற்கு ரூ. 3,75,79,162/– ஆகும். 201 – பணியாளர்களை நிரந்தரமாக நியமித்து வழங்கும் ஊதியத்தொகையை விட, தனியாரிடம் ஒப்படைத்தால் ஆண்டொன்றிக்கு ரூ.1,27,77,770/– செலவு குறைகின்றது.

எனவே, தூய்மைப்பணியாளருக்கான ஊதியம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையிலேயே வழங்கினால் போதும் என்பதாலும், நகராட்சி பணியாளர் செலவினம் 49 விழுக்காட்டிற்கும் அதிகமாக உள்ளதாலும், திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் செய்வதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர் வர்களின் செயல்முறை உத்தரவின் கால அளவை புதுப்பிப்பதற்கும், தேவையான அளவிற்கு குறைவாக உள்ள 201 பணியாளர்களை வெளிமுகமை மூலம் எடுத்து பணி செய்வதற்கும்,, உரிய உத்தரவு வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்புவதற்கு மன்றத்தின் பதிவிற்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>** -- மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.882/ 2017 / எச்–1**

**3)** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் கீழ்கண்டுள்ள தூய்மை பணியாளர்கள் **30.06.2021** அன்று வயதுமுதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெறவுள்ளதால் அவர்களுக்கு சேர வேண்டிய சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை மற்றும் அதற்குரிய வட்டி மற்றும் அரசு மான்யம் ஆகியவற்றின் விவரம் மற்றும் பணியாளர்களின் விவரம் பின்வருமாறு

| **வ எண்** | **பணியாளர்கள் பெயர்/ பதவி (திருவாளர்கள்)** | **பணியில் சேர்ந்த நாள்** | **ஓய்வு பெற்ற நாள்** | **வழங்கப்படும் தொகையின் விவரம்** | **மொத்த தொகை ரூ.** |
|---|---|---|---|---|---|
| 1 | வரதாயி கரூர்ராமன்<br>தூய்மை பணியாளர்– III | 19.12.1986 | 30.06.2021 | தவனைத் தொகை– ரூ.2960/–<br>வட்டி தொகை – ரூ.17464/–<br>அரசு வழங்கும் தொகை– ரூ.10000/– | **30424** |
| 2 | தில்லையம்மாள் கலியமூர்த்தி<br>தூய்மை பணியாளர் – III | 19.08.1991 | 30.06.2021 | தவனைத் தொகை– ரூ.2960/–<br>வட்டி தொகை – ரூ.8603/–<br>அரசு வழங்கும் தொகை– ரூ.10000/– | **21563** |
| 3 | பாலாயி கிருஷ்ணன்<br>தூய்மை பணியாளர்– II | 24.12.1986 | 30.06.2021 | தவனைத் தொகை– ரூ.2960/–<br>வட்டி தொகை – ரூ.17464/–<br>அரசு வழங்கும் தொகை– ரூ.10000/– | **30424** |
| 4 | மலர்கொடி அழகப்பன்<br>தூய்மை பணியாளர்– I | 08.07.1989 | 30.06.2021 | தவனைத் தொகை– ரூ.2960/–<br>வட்டி தொகை – ரூ.10869/–<br>அரசு வழங்கும் தொகை– ரூ.10000/– | **23829** |
| 5 | நாகப்பன் மொட்டையன்<br>தூய்மை பணியாளர்– III | 01.07.1991 | 30.06.2021 | தவனைத் தொகை– ரூ.2960/–<br>வட்டி தொகை – ரூ.8677/–<br>அரசு வழங்கும் தொகை– ரூ.10000/– | **21637** |
| | | | | **மொத்தம்** | **127877** |

மேற்காணும் கணக்கீட்டின்படி ஓய்வு பெற்ற ஐந்து பணியாளர்களுக்கும் சிறப்பு சேமநல நிதி தவணைத்தொகை, வட்டி மற்றும் அரசு மாண்யம் தொகை ஆகியவற்றினை பொதுநிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :**

அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.0959 / 2021 / பி3**

**4)** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்த திருமதி.பழனியம்மாள் க/பெ.பூசைமணி என்பவர் **31.03.2021** அன்று பணியிடைக் காலமானதால் அன்னாருக்கு சேர வேண்டிய சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.**2960/–** மற்றும் அதற்குரிய வட்டி தொகை ரூ.**3701/–** சேர்த்து மொத்த தொகை ரூ.**6661/–**யினை அவரது வாரிசுதாரரும், மகனுமான திரு.P.ராம்குமார் என்பவருக்கு பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| தவணை தொகை = | ரூ. 2960 |
| வட்டி தொகை = | ரூ. 3701 |
| **மொத்தம் =** | **ரூ. 6661** |

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.1625/2021/பி3**

**5)** சிதம்பரம் நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக 15.06.1998 முதல் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சி பகுதி 4.82 சதுர கிலோ மீட்டர் பரப்பை கொண்டு 33 வார்டுகளுடன், 62153 மக்கள் தொகை கொண்ட நகராட்சியாகவும் செயல்பட்டு வருகிறது . இந்நகரில் நாள் ஒன்றுக்கு 18 மெட்ரிக் டன் திடக்கழிவு உருவாகின்றது. தேர்வு நிலை நகராட்சியில் பொது சுகாதார பணிகளை கண்காணிக்க ஒரு துப்புரவு ஆய்வரும், 2 துப்புரவு பணி மேற்பார்வையாளர்களும் பணிபுரிகின்றார்கள். மேலும், அரசால் அனுமதிக்கப்பட்ட – 197 தூய்மைப்பணியாளர் பணியிடத்தில், 43 தூய்மைப்பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றார்கள், பணியாளர் இறப்பு மற்றும் ஒய்வு போன்றவைகளால் 153 தூய்மைப்பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது.

சிதம்பரம் நகராட்சிப்பகுதியில் உள்ள 33 வார்டுகளில், பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்வதற்கு, அரசாணை (நிலை) எண்–101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 30.04.1997 – ன் படி – 244 தூய்மைப்பணியாளர்கள் தேவைப்படும் நிலையில், 43 நிரந்தர தூய்மைப்பணியாளர்களும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவின் ஆணைக்கிணங்க, (ந.க.எண் K.Dis 12398/P3/2018 நாள். 13.05.2018) ஒப்பந்ததாரர் மூலம் 142 பணியாளர்களும் , கூடுதலாக – 185 பணியாளர்களைக்கொண்டு சுகாதாரப் பணி செம்மையாக செயல்பட்டு வருகிறது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் வழங்கப்பட்ட அனுமதிக்காலம் வருகின்ற அக்டோபர் 2021 உடன் முடிவடைகின்றது.

மேற்கண்ட அரசாணையின்படி – 244 தூய்மை பணியாளர்கள் தேவைப்படும் நிலையில், தற்போது 43 நிரந்தரப்பணியாளர்கள் மற்றும் 142 தற்காலிக பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றார்கள். தற்போது எதிர்வரும் மழைக்காலத்தினை கருத்தில்கொண்டு மழைநீர் வடிகால் தூர்வார மற்றும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ள 10 தூய்மைப் பணியாளர்களை நியமிப்பது அவசியமாக உள்ளது. இப்பணியாளர்களை (மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி விகிதம்) ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படும் பட்சத்தில் ஆகும் செலவினம் 3 மாதத்திற்கு ரூ.4,85,770/– ஆகும்.

எனவே நகராட்சி நிர்வாக ஆணையரின் மேற்காணும் செயல்முறை உத்தரவின்படி, 10 தூய்மை பணியாளர்களை தற்போது நடைமுறையில் உள்ள ஒப்பந்ததாரர் மூலமான வெளிமுகமை மூலம் எடுத்து பணி செய்வதற்கும் அதற்காகும் செலவீனத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u> -- மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.882/ 2017 / எச்–1**

**6)** மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் பராமரிப்பில் உள்ள இடங்களில் திரைப்பட படபிடிப்பு நடத்துவதற்கு தடையில்லா சான்று கோரி https://tnurbanepay.tn.gov.in-ல் விண்ணப்பம் செய்யவும் சமர்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து https://tnurbanepay.tn.gov.in இணைய தளம் வழியாக தடையில்லா சான்று வழங்குவதற்கும், கட்டணம் வசூல் செய்வதற்கும் இணையதளத்தில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரசிதழ் எண்.48, தொழிற்வளர்ச்சி துறை, நாள்.27.01.2021ல் படபிடிப்பு நடத்துவதற்கு கால அளவு 7 நாட்கள் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் திரைப்பட படபிடிப்பு நடத்துவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள கால அளவுக்குள் புகார்களுக்கு இடம் அளிக்கா வண்ணம் நடவடிக்கை எடுத்து உரிய கட்டணங்கள் வசூலித்தப்பின் தடையின்மை சான்று வழங்குவது குறித்து இறுதி உத்தரவு வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சிதம்பரம் நகராட்சி சொந்தமான இடங்களில் திரைப்பட படபிடிப்பு நடத்திட நாள் ஒன்றுக்கு (24 மணி நேரம்) ரூ.5000/— எனவும் நகராட்சி உட்பட்ட பிற பகுதிகளில் படபிடிப்பு நடத்திட நாள் ஒன்றுக்கு (24 மணி நேரம்) ரூ.3000/— எனவும் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.1858 / 2021 / எப்1**

**7)** சிதம்பரம் நகராட்சியில் 79 எண்ணிக்கை சிறுமின்விசை பம்புகள், தலைமை நீரேற்று நிலைய மோட்டார், மானா தெரு உயர்மட்ட தொட்டி மோட்டார், நடராஜா கார்டன் உயர்மட்ட தொட்டி மோட்டார், கனகசபை நகர் உயர்மட்ட தொட்டி மோட்டார், மேலரத வீதி மோட்டார், சிவசிவ நகர் உயர்மட்ட தொட்டி மோட்டார், மீன்மார்க்கெட் போர்வெல், வீரபத்ரசாமி கோயில் தெரு போர்வெல் மற்றும் மூன்று புதைசாக்கடை திட்ட நிலையங்களில் உள்ள மோட்டார் ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் சிறுசிறு பழுதுகளை சரிசெய்யவும் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிக்கட்டிடங்கள் அங்கன்வாடி மையங்கள் மற்றும் அலுவலக கட்டிடங்களில் உள்ள மின் பணிகளை பார்க்கவும் நிரந்தர பணியாளர்கள் எவரும் இல்லாததாலும், நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் அத்தியாவசிய பணி என்பதாலும், மூன்று நபர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண். 92, நாள் 29.11.2019—ல் அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் **21.11.2019** அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண். **112**, நாள் **29.11.2019–ன்படி** ஒப்பந்ததாரர் மெஸ்ஸர்ஸ் பாலன் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திற்கு **29.11.2019–ல்** பணி உத்தரவு வழங்கப்பட்டு **01.12.2019** முதல் **30.11.2020** வரை பணியாட்களை வழங்கிட உத்தரவிடப்பட்டது. தற்போது பணிகாலம் முடிவடைவதாலும், ஒப்பந்த அடிப்படையில் மனித சக்திகளை பெற்று பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நகர்மன்ற தீர்மான எண்.**110** , நாள் : **31.12.2020–ன்படி** மூன்றுமாத காலத்திற்கு **01.12.2020** முதல் **28.02.2021** வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. அனுமதிபெற காலதாமதம் ஏற்படுவதாலும் சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் மாதம் வர இருப்பதாலும் தேர்தல் நடத்தை விதி அமுலில் வந்ததால் நகர்மன்ற தீர்மான எண்.**155**, நாள் : 26.02.2021–ன்படி மூன்றுமாத காலத்திற்கு **01.03.2021** முதல் **31.05.2021** வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது.

தற்போது கோவிட்–**19** காரணமாக நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி பெற காலதாமதம் ஏற்படுவதால் பணியின் அவசர அவசியம் கருதி மேலும் மூன்று மாத காலத்திற்கு **01.06.2021** முதல் **31.08.2021** வரை மேற்கண்ட ஒப்பந்ததரார் மூலம் அதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே மனித சக்திகளை பெற்று பணியினை மேற்கொள்ளவும் இதற்காகும் செலவினம் ரூ.**1.35** இலட்சத்திற்கும் செலவை நகராட்சி குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 336/2019/இ1)**

**8)** சிதம்பரம் நகராட்சியில் வக்காரமாரி தலைமை நீரேற்று நிலையம் மூலம், மானா தெரு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, நடராஜா கார்டன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கனகசபை நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, சிவசிவ நகர் உயர்மட்ட தொட்டி மற்றும் மீன்மார்க்கெட் ஆழ்துளை கிணறு, வீரபத்ரசாமி கோயில் தெரு ஆழ்துளை கிணறு மற்றும் பேருந்து நிலைய கீழ்நிலை தொட்டி மூலமாக சிதம்பரம் நகருக்கு நாள்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இப்பணிகள் மேற்கொள்ள போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததாலும், நகரப்பகுதியில அவ்வப்போது ஏற்படும் பிரச்சனைகளை சரிசெய்யவும், நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படாவண்ணமும், பொதுமக்களின் நலன் கருதியும், **14** நபர்களை ஒப்பந்த

அடிப்படையில் வைத்து பணிகள் மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண். 95, நாள் **29.11.2019** அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் **21.11.2019** அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண். 111, நாள்: **29.11.2019**—ன்படி ஒப்பந்ததாரர் திரு. எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு **29.11.2019**—ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு **01.12.2019** முதல் **30.11.2020** வரை பணியாட்களை வழங்கிட உத்தரவிடப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் மனித சக்திகளை பெற்று பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நகர்மன்ற தீர்மான எண்.111 , நாள் : **31.12.2020**—ன்படி மூன்றுமாத காலத்திற்கு **01.12.2020** முதல் **28.02.2021** வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. அனுமதிபெற காலதாமதம் ஏற்படுவதாலும் சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் மாதம் வர இருப்பதாலும் தேர்தல் நடத்தை விதி அமுலில் வந்ததால் நகர்மன்ற தீர்மான எண்.154, நாள் : 26.02.2021—ன்படி மூன்றுமாத காலத்திற்கு **01.03.2021** முதல் **31.05.2021** வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது.

தற்போது கோவிட்—19 காரணமாக நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி பெற காலதாமதம் ஏற்படுவதால் பணியின் அவசர அவசியம் கருதி மேலும் மூன்று மாத காலத்திற்கு **01.06.2021** முதல் **31.08.2021** வரை மேற்கண்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே மனித சக்திகளை பெற்று பணியினை மேற்கொள்ளவும் இதற்காகும் செலவினம் ரூ.**6.35** இலட்சத்திற்கும் செலவை நகராட்சி குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 336/2019/இ1)**

**9)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படி வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| டேங்கர் லாரி | -- | 2 எண்கள் |
| டம்பர் பிளேசர் | -- | 1 எண். |
| ஈப்பு | -- | 1 எண். |
| JCB | -- | 1 எண். |
| டிராக்டர் | -- | 4 எண்கள். |
| சல்லேஜ் டேங்கர் | -- | 1 எண். |
| ஜெட் ராடிங் | -- | 2 எண்கள். |
| டி—சில்டிங் | -- | 1 எண். |
| மொத்தம் | -- | 13 எண்கள் |

மேற்கண்ட வாகனங்களை இயக்குவதற்கு, நகராட்சியில் மூன்று நிரந்தர பணியாளர்கள் மட்டுமே உள்ளார்கள். குடிநீர் விநியோகம், கழிவுநீர் அகற்றுதல், பொது

சுகாதார பணிகள், குப்பை அகற்றுதல் போன்ற இன்றியமையாத பணிகள் இதனால் பாதிப்படைகின்றது. இதனை தவிர்க்கும் பொருட்டு, பொதுமக்கள் நலன் கருதியும், பொறியியல் பிரிவிற்கு 3 (மூன்று) ஓட்டுனர்களும், பொது சுகாதார பிரிவிற்கு 3 ஓட்டுனர்களும் ஒப்பந்த அடிப்படையில் வைத்து பணிகள் மேற்கொள்ள மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண். 94, நாள் 29.11.2019–ல் அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் 21.11.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண். 104, நாள் 29.11.2019–ன்படி ஒப்பந்ததாரர் திரு. எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு 29.11.2019–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.12.2019 முதல் 30.11.2020 வரை பணியாட்களை வழங்கிட உத்தரவிடப்பட்டது. தற்போது பணிகாலம் முடிவடைவதாலும் ஒப்பந்த அடிப்படையில் மனித சக்திகளை பெற்று பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நகர்மன்ற தீர்மான எண். 109, நாள் :31.12.2020–ன்படி மூன்றுமாத காலத்திற்கு 01.12.2020 முதல் 28.02.2021 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. அனுமதிபெற காலதாமதம் ஏற்படுவதாலும் சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் மாதம் வர இருப்பதாலும் தேர்தல் நடத்தை விதி அமுலில் வந்ததால் நகர்மன்ற தீர்மான எண்.152, நாள் : 26.02.2021–ன்படி மூன்றுமாத காலத்திற்கு 01.03.2021 முதல் 31.05.2021 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது.

தற்போது கோவிட்–19 காரணமாக நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி பெற காலதாமதம் ஏற்படுவதால் பணியின் அவசர அவசியம் கருதி மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.06.2021 முதல் 31.08.2021 வரை மேற்கண்ட ஒப்பந்ததாரார் மூலம் அதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே மனித சக்திகளை பெற்று பணியினை மேற்கொள்ளவும் இதற்காகும் செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 336/2019/இ1)**

**10)** சிதம்பரம் நகராட்சியில் ஒரு பட வரைவாளர் மற்றும் ஒரு பணி ஆய்வர் பணியிடம் நீண்டகாலமாய் காலியாக உள்ளது. இந்நகராட்சிக்கு வருடந்தோறும் தோராயமாக பல திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றை கண்காணிக்க போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாததால், இரண்டு தொழில்நுட்ப உதவியாளரை ஒப்பந்த அடிப்படையில் PWD Schedule of rate 2019–20–ன் விலை விகிதத்தின் அடிப்படையில் அமர்த்தி பணிகளை மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண். 93, நாள் 29.11.2019–ல் அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் **21.11.2019** அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண். **105**, நாள் **29.11.2019–**ன்படி ஒப்பந்ததாரர் திரு. எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு **29.11.2020–**ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு **01.12.2019** முதல் **30.11.2020** வரை பணியாட்களை வழங்கிட உத்தரவிடப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் மனித சக்திகளை பெற்று பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். **108**, நாள் : **31.12.2020–**ன்படி மூன்றுமாத காலத்திற்கு **01.12.2020** முதல் **28.02.2021** வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. அனுமதிபெற காலதாமதம் ஏற்படுவதாலும் சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் மாதம் வர இருப்பதாலும் தேர்தல் நடத்தை விதி அமுலில் வந்ததால் நகர்மன்ற தீர்மான எண்.**156**, நாள் : 26.02.2021–ன்படி மூன்றுமாத காலத்திற்கு **01.03.2021** முதல் **31.05.2021** வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது.

தற்போது கோவிட்–**19** காரணமாக மேலும் மூன்று மாத காலத்திற்கு **01.06.2021** முதல் **31.08.2021** வரை மேற்கண்ட ஒப்பந்ததரார் மூலம் அதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே மனித சக்திகளை பெற்று பணியினை மேற்கொள்ளவும் இதற்காகும் செலவினம் ரூ.**1.45** இலட்சத்திற்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 336/2019/இ1)**

**11)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட **2274** தெருவிளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரிப்பு மேற்கொள்வதற்கு நான்கு மின் கம்பியாளர்கள், நான்கு மின் கம்பி உதவியாளர்கள் கொண்டு பராமரிக்கப்பட வேண்டும். ஆனால் தற்போது ஒரு மின் கம்பியாளர் மட்டுமே உள்ளனர். இதனால் பருவமழை காலங்களிலும், மின்னழுத்த வேறுபாடுகளின்போதும், அடிக்கடி ஏற்பட்டு வரும், தெருவிளக்கு பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய இயலாத நிலை உள்ளன. போதிய பணியாளர்களின்றி **160** எண்கள் சுவிட்சுகள் இயக்கம் மற்றும் பராமரிக்க மிகவும் கடினமான நிலை உள்ளதோடு உரிய நேரத்தில் விளக்குகளை எரியவைப்பது மற்றும் அமைக்கும் பணி சுணக்கமாகி மின் விரயம் ஏற்படுகிறது.

எனவே, மூன்று மின் கம்பியாளர் கிரேடு–2, பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண். 90, நாள் 2911.2019–ல் அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் 21.11.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண். 107, நாள் 29.11.2019–ன்படி ஒப்பந்ததாரர் திரு. எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு 29.11.2019–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.12.2019 முதல் 30.11.2020 வரை பணியாட்களை வழங்கிட உத்தரவிடப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் மனித சக்திகளை பெற்று பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நகர்மன்ற தீர்மான எண். 112, நாள் :31.12.2020–ன்படி நான்குமாத காலத்திற்கு 01.12.2020 முதல் 31.03.2021 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. அனுமதிபெற காலதாமதம் ஏற்படுவதாலும் சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் மாதம் வர இருப்பதாலும் தேர்தல் நடத்தை விதி அமுலில் வந்ததால் நகர்மன்ற தீர்மான எண்.153, நாள் : 26.02.2021–ன்படி மூன்றுமாத காலத்திற்கு 01.04.2021 முதல் 31.06.2021 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது.

தற்போது கோவிட்–19 காரணமாக நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி பெற காலதாமதம் ஏற்படுவதால் பணியின் அவசர அவசியம் கருதி மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.07.2021 முதல் 30.09.2021 வரை மேற்கண்ட ஒப்பந்ததரார் மூலம் அதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே மனித சக்திகளை பெற்று பணியினை மேற்கொள்ளவும் இதற்காகும் செலவினம் ரூ.1.35 இலட்சத்திற்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 336/2019/இ1)**

**12)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண். 7, மன்மதசாமி நகர் பூங்காவில் மண்கொட்டி சமன்படுத்துதல், பூச்செடிகள் மற்றும் புல்வெளி அமைத்தல், விளையாட்டு உபகரணங்களை பழுது அகற்றி புதுப்பித்தல் மற்றும் மின்வசதி ஏற்படுத்துதல் போன்ற சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.1,25,000/–க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதி–2021–22–ல் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1873/2021/இ1**

**13)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண். 4, நடராஜா கார்டன் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் இரும்பு கம்பி வேலி (Chain link fencing) வால்வு திறக்கும் தொட்டி கட்டி சுற்று சுவர் பூசுதல், தரைதளத்தினை சமன் செய்தல், (Gravel filling) மற்றும் மின்வசதி ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.4,20,000/–க்கும் செலவை நகராட்சி குடிநீர் நிதி–2021–22–ல் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1873/2021/இ1**

**14)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண். 7, மானா சந்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் கிராவல் கொட்டி சமன்படுத்துதல், வால்வு தொட்டியினை உயர்த்துதல், மேல் மூடி அமைத்தல், பூசுவேலை செய்தல் மற்றும் மின்வசதி ஏற்படுத்துதல் போன்ற சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.2,50,000/–க்கும் செலவை குடிநீர் நிதி–2021–22–ல் ல் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1873/2021/இ1**

**15)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட சபாநாயகர் தெரு, வைப்பு சாவடி, மேற்கு ரதவீதி மற்றும் வடக்கு மெயின்ரோடு ஆகிய பல்வேறு சாலைகளில் குடிநீர் குழாய் சீரமைப்பிற்காக சாலைகள் தோண்டடப்பட்டு சேதமடைந்துள்ளது. மேற்படி சாலைகளை சீர்செய்யும்பொருட்டு CC Batch Work செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.90,000/–க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதி–2021–22–ல் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1873/2021/இ1**

**16)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண். 32, சிவசிவ நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் மண் கொட்டி சமன்படுத்துதல், சுற்றுசுவர் கட்டி இரும்பு கம்பி வேலி அமைத்தல், புதிய வால்வு தொட்டி கட்டி பூசுதல் மற்றும் Precast Slab அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.2,50,000/–க்கும்

செலவை நகராட்சி குடிநீர் நிதி– 2021–22–ல் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1873/2021/இ1**

**17)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண். 18, வெல்லபிறந்தான் தெருவில் உள்ள சிறுமின்விசை பம்பு (Mini Power Pump) பழுது நீக்கி, சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.30,000/–க்கும் செலவை நகராட்சி குடிநீர் நிதி– 2021–22–ல் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1873/2021/இ1**

**இடம்: சிதம்பரம்**
**நாள்: 28.06.2021**

**தனி அலுவலர்,**
**சிதம்பரம் நகராட்சி**